C.C.177/2017 Date: 10.02.2026

அ.சா.4 லெட்சுமி க.பெ.சாத்தையா

1ம் எதிரி சபரி ஆஜர் இல்லை. அவரைப்பொறுத்து குவிமுச பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.
(சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்)

**சாட்சி மனுவின் பெயரில் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை:**

கையெழுத்து போட்ட பேப்பரில் எழுதியிருந்த விபரங்கள் தெரியுமா என்றால் தெரியும். அஜித் எனக்கு உறவினரா என்றால் இல்லை. அஜித்தை தெரியுமா என்றால் தெரியாது. அ.சா.2 சுசிலாவை தெரியுமா என்றால் தெரியாது. போலீசார் என்னிடம் சம்பவம் நடந்த இடத்தில்தான் கையொப்பம் வாங்கினார்கள். நானும் பாண்டி என்பவரும் வந்தோம். எங்கள் இருவரிடமும் கையெழுத்து வாங்கினார்கள். மேற்படி பேப்பரில் என்ன விபரங்கள் எழுதியிருந்தது என்று முழுமையாக சொல்ல முடியுமா என்றால் சொல்ல முடியும். கையெப்பம் போட்ட பேப்பரில் எந்த வழக்கு எண்ணில் எந்த பிரிவின் கீழ் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் மறந்துவிட்டது. மேற்படி பேப்பரில் 6 வது வரியில் என்ன உள்ளது என்றால் தெரியாது, மறந்துவிட்டது. போலீசார் விசாரணையில் எங்கிருந்து எங்கு போய்க்கொண்டிருந்தேன் என்று சொன்னேனா என்றால் தேவகோட்டையிலிருந்து நல்லிவயலுக்கு போய்க்கொண்டிருந்ததாக சொன்னேன். எத்தனை மணி என்று சொன்னேனா என்றால் காலை 11 மணி என்று சொல்லியுள்ளேன். எந்த போலீசார் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள் என்றால், ஆறாவயல் போலீசார் என்று தெரியும் பெயர் தெரியாது. மேற்படி பேப்பரில் யார் விபரம் எழுதியது என்றால் போலீசார்தான்

எழுதினார்கள். மேற்படி பேப்பரை எழுதும்போது நான் கூட இருந்தேனா என்றால் ஆமாம். நான் படித்து பார்த்துதான் கையெழுத்து போட்டேன். பாண்டியை தவிர வேற நபர்கள் யாரும் அருகில் இல்லை. எனக் பேப்பரில் எழுதியிருந்த விபரங்கள் எதுவும் தெரியாது என்றும் போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க கையெழுத்து போட்டேன் என்றும், அதனால்தான் என்னால் விபரங்களை முழுமையாக சொல்ல முடியவில்லை என்றால் சரியல்ல. நான் போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க கையொப்பம் போட்டேன் என்றால் சரிதான்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d..D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.